உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி ௵ மார்கழி ௴ { பகுதி ௯

## உபாத்திம-மாணவர்களுக்கோர் உபதேசம்.

(243-ம் பக்கத்தொடர்ச்சி)

**பா**மரப் படிப்பினாலேயே நாடு க்ஷேமம் அடையு மென்பதையும், அது தாய்ப் பாஷாபிவிருத்தியினாலேயே எளிதில் ஆகக்கூடிய தென்பதையும் நீங்கள் நன்கு கவனியுங்கள். ஏனையோரிலும் நீங்கள் செல்வம் செல்வாக்கு தேகவலிமை முதலியவற்றில் ஏறக்குறையக் குறைந்தோராயினும், நீங்கள் ஒன்றில் மாத்திரம் எவர்க்கும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதை நான் அறிவேன். அதாவது தேசாபிமானத்தில். இவ்வபிமானம் யாவர்க்கும் இயற்கையில் உதிப்பதே. இதைப்பற்றி கோல்ட் ஸ்மித் என்ற ஆங்கிலகவி,

குளிரால் நடுங்கிக் கொண்டே இருக்கும்
சீதள பூமியிற் சேர்ந்துறை வோனும்
இவ்வுல கத்துள இடங்களி லெல்லாம்
தன் உறை விடமே தான்சுக பூமியென்
றிம்மியும் கூசா தெடுத்துரைக் கின்றான்;
கொந்தளிப் புடனே கூடிய தாகிய
தன் கடல் கொண்டுள மன்பெரு நிதியையும்
கள்ளாட் டயரவும், கவல்களை நீக்கவும்
தனக்குள நீண்ட தனிஇராப் பேற்றையும்
குறித்துப் பெருமை கொண்டா கிறான்;

புனையுடை நீக்கிப் பூமத் தியரே
கைக்கரு காண்மையில் கடுவெயில் பொருது
நெடுமூச் சுடனுறை நீக்ரோ வனும் தன்
எழில் பொன் மணலையும் ஈச்சங் கன்னையும்
பற்றிப் பெருமை பாராட் டுகிறுன்;
காந்தும் வெயிலிற் காய்ந்தும், வெய்ய
திரையொடு பொருது திளைத்தும், தனக்கு
நல்கிய எல்லா நலநிமித் தமுந்தன்
வழிபடு கடவுளை வாழ்த்துகின் றனனுல்,
எங்கெங் கேநாம் எய்திக் காணினும்
தேசாபி மானம் திகழ்பவர் புகழுரை
இத்தகைத் தாகவே இருக்கும்; இன்னவர்க்கு
ஒருமுதல் நாடும் உத்தம பூமியும்
தாயக மாகும் தமதுறை விடமே.

என்று கூறி யிருப்பதையும், இஃதில்லாளைப்பற்றி ஸர்வால்டர் ஸ்காட் என்ற ஆங்கில கவி,

"ஈதென் சொந்த ஊர்: ஈதென் பிறப்பிடம்"
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
சொல்லுதற் கொண்ணு நல்உணர் வில்லா
ஒருவ னேனும் உயிருடன் உளனே?
அந்நிய நாட்டினில் அலைந்துபின் தன்னூர்
நோக்கிக் காலடி போக்கிய காலையில்
உள்ளம் குளிரா ஒருவனும் உளனே?
இத்தகை ஒருவன் இருப்பனே ஆயின்,
சென்று 'அவன் யாவன்?' என்று நன்குஅறிதி.
உயரிய பட்டம் உடையோ னுயினும்,
பெயரால் அவன்மிகப் பெரியவ னுயினும்,
ஆசை விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவ னுயினும், பரவசத் துடன்எப்
பாணரும் அவன்புகழ் பாடுதல் ஒழிவர்."

என்று கூறியிருப்பதையும் நீங்கள்நன்கறிவீர்களே.

உங்கள் தேச விஸ்தீரணத்தைப் பற்றித் திகிலடையாதீர்கள். தற்கால இந்தியாமிகவும் விசாலித்ததே. ஒருக்கால் திபேத்தையும் அதற்கப்பால் உள்ளநாடுகளையும் இஃதுள்ளடக்கும் காலம்வந்தாலும் வரும். ஆரம்பத்தில் உங்கள் அபிமானம் கிராமத்தில் தொடங்கட்டும்.

நாளடைவில் இந்தியா உலகமுழுதும் வியாபித்தாலும் உங்கள் அபிமானம் லோகாபிமானமாகவே பெருகு மென்பது திண்ணம்.

இனி நீங்கள் மாணவர்க்குக் கற்பிக்க வேண்டிய விதம் நடந்து கொள்ள வேண்டிய விதம் முதலியன பெருந்தகைமை சான்ற உங்கள் உபாத்திமாராலேயே நன்கு போதிக்கப்பட்டிருப்பீர்கள். போதாக்குறைக்கு கல்வி இலாகா அதிகாரிகளால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் விதிகள் மூலமாகவும் அறிவீர்கள். ஆயினும் மூன்று விஷயங்கள் மாத்திரம் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

முதலாவது:—உங்கள் நடத்தையால் பிள்ளைகள் உங்களைக் கண்டவுடன் பேய்போல் அஞ்சவாவது புல்லுருவாக உங்களை அலட்சியம் செய்யவாவது செய்துகொள்ளாதீர்கள். "பிரம்பினால் பயமுறுத்துவதிலும் பிரியத்தால் வசீகரிப்பது பலவகையினும் பயனுடைத்து" என்பதை மனத்திருத்துங்கள். பாடந் தெரிந்துகொள்வதற்கேயன்றித் தங்கட் கியற்கையில் ஏற்படக் கூடிய பலவித கஷ்டங்களினின்றும் நிவர்த்தி தேட உங்களைப் பிள்ளைகள் அணுகும்படி உங்கள் பிரியத்தாலும் முன்மாதிரியாலும் செய்துகொள்ளுங்கள். சுருங்கச்சொல்லின், பிள்ளைகளை உங்கள் தம்பிமார்கள் போலவும் அருமை மக்கள் போலவும் கருதி நடத்துங்கள்.

இரண்டாவது:—தம் தகுதியையும் தம் தொழிலின் பொறுப்பையும் உணராது வயிற்றுப்பாட்டிற்காக உபாத்திமைத் தொழில் புரிபவர் சிலர்உளர். இன்னோர் பையன்கள் படிப்பைப் பற்றிக் கருத்தில்லாது மாதமுடிவையே எதிர் பார்த்துச் சம்பளம் பெறுவர். இவர்கள் கேவலம் அற்பக் கூலி வேலைக்காரர் என்றே எண்ணுங்கள்.

இன்னும் சில உபாத்தியாயர்க்குத் தங்களையும், தங்கள் மாணவர்களையும் பற்றியே தான் ஏதேனும் தெரியும்; அன்னோர் அக்கறை எல்லாம் கலாசாலைக் கட்டடத்தோடும் பள்ளி நேரத்தோடும் முடிவடையும். ஒருக்கால் மனச்சாட்சிக்கு விரோதமின்றிப் பள்ளி நேரத்தைக் கற்பிப்பதிலேயே அவர்கள் செலவழித்தலும் கூடும். ஆயினும் பயன்மட்டும் திருப்தியாய் இராது.

உத்தம உபாத்தியாயர்கள் தம் தொழிலில் தம்மையும் பிள்ளைகளையும்தவிர இதில்சம்பந்தப்பட்டவர்கள் பிள்ளைகளின் பெற்றோர் என்பதை உணர்ந்தவர்கள். மேற் சொல்லிய வற்றால் மூவகை உபாத்திமார் இருப்பதை அறிவீர்கள். நிற்க,

நம் சிறார்களிடம் பெற்றோர்க் கடங்காக் குணம் தற்காலத்தில் அதிகரிக்கிற தென்று புலம்புவோர் சிலரை நான் அறிவேன். நான் அறிந்தமட்டில் பிள்ளைகள் குணம் தொன்று தொட்டு இன்று வரை வேறுபடவே இல்லை. தோஷம் முதலில் பெற்றோரிடத்தும் இரண்டாவது உபாத்திமாரிடத்திலும் இருக்கிற தென்பதே என் முழு நம்பிக்கை.

சாதாரண உபாத்திமார்களுக்குப் பிள்ளைகளுக்குப் பிரம்படி கொடுத்தல் முதலிய சிக்ஷை விதிக்க அதிகாரமில்லை; ஆதலின் நம்பால் பிள்ளைகள் அஞ்சா. சிரத்தையும் நல்லொழுக்கமும் குறைந்த பிள்ளைகளைத் திருத்துவது பெற்றோரின் உதவி கொண்டால் மட்டும் ஏகதேசம் எளிதாகும். ஆதலின் சமயம் வாய்த்த போதெல்லாம் பிள்ளையின் பெற்றோர்களோடு கூடி பையனின் குறையைக் கூறப் பிரயத்தினப் படுங்கள். ஆனால் எனது நண்பர் ஒருவர் கூறியபடி இதைப் பூரணமாக அநுஷ்டித்தல் சிறிது கஷ்டமே. அவர் என்னிடம் ஒருநாள் சொன்னதாவது:—“ஐயா, சொல்வதற்கும் செய்வதற்கும் எவ்வளவு வித்தியாசம்! நான் முதலில் இவ் வுத்தியோகத்தில் அமர்ந்த பொழுது உங்கள் போதனையைக் கேட்டு அதன்படி நடக்க எவ்வளவோ பாடுபட்டேன். முடிவில் ஏமாந்தேன். முதல் முதல் என் கவலை யெல்லாம் ஏழைப் பிள்ளைகள் பாற் சென்றது; அவர்கள் பெற்றோரைக் கண்டு பையன்களின் குறையை இரண்டு தடவைகளில்எடுத்துச் சொன்ன பிறகு நான் மூன்றாந்தடவை அவர்களைப் பார்க்கச் சென்ற போது அவர்கள் “ஐயோ! எங்கள் பிள்ளைகள் எருமைக் கடாவுக்கும் கேடாய் விட்டார்களே! இம்மந்திகளை என்ன செய்வது. படிப்பை நிறுத்தினால் பணச்செலவாவது குறையும்” என்று என்னைக் கட்டிக்கொண்டழுதார்கள். பையன்களை நிறுத்தி விட்டால் மாணவர் தொகை எங்கு குறையுமோ என்ற அச்சத்தால் நான் அவர்களைப் பின்னும் பார்ப்பதை நிறுத்தி விட்

டேன். அப்பெற்றோரின் நிலை கண்டு பெரிதும் இரங்கினேன். இனிச் செல்வர்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. தமக்குப் பிள்ளை யுண்டு என்பதே மாதா மாதம் 7-ம் தேதிக்கு மேல் அவர்களுக்குச் சம்பளம் சொடுபட வேண்டிய 15உக்குள் ஒருநாள்தான் ஞாபகத் திற்கு வரும். ஏனெனில் அவர்களைச் சம்பளத்திற்காக அரித் தெடுக்க வரும்பொழுதே அவர்களைக் காண நேரிடும் வக்கீல்களின் பிள்ளைகளுடைய நிலைமையோ எவரும் பொறுமை எய்தத்தக்க தன்று. ஏனெனில், இச் சம்பளப் பொருட்டேனும் தம் பெற் றோரைக் காணவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை. சிரமமே யின்றி குமாஸ்தாக்களிடம் குறித்த காலத்தில் பெற்றுச் செல்லு கின்றனர். ஆயினும் பிள்ளைகள், பெற்றோர், உபாத்தியாயர் ஆகிய இம்மூவருக்கும் துக்ககரமான தினம் பள்ளிக்கூடம் திறந்த 2-வது வாரத்தில் பரீக்ஷை முடிவு வெளியிடுந் தினமேயாகும். அன்று எத் தனை பெற்றோர்கள் பிள்ளைகளின் உபத்திரவம் பொறுது அவர்களை "Trial promotion" ல் அவர்களை மேல்வகுப்புக்கு எடுக்குமாறு மன்றாடு கின்றனர். என்னை என் வீட்டிலாவது பள்ளியிலாவது பார்ப்பது அகெளரவமென அவர்கள் உணர்கிறார்கள் என்பதைக் கண்டுணர்ந்த நான், வலிய அவர் வீட்டிற்குச் சென்றேன். அப் பொழுது என்னை வர வேற்ற விதத்திலிருந்து மறுமுறை என்னைக் காண அவர்கள் அவாக் கொண்டவர்கள் அல்லர் என்பது வெளியா யிற்று. அவர்களைக் குறை கூறவும் காரணமில்லை. ஏனெனில் எவ ருமே வயிற்றுப்பாட்டி னிமித்தம் பொருள் தேடுவதில் இக்ஷாம காலத்தில்" நீ முந்து நான் முந்து" என்று உழல்பவர்களாகவே இருக்கிறார்கள்."செல்வ மென்பது சிந்தையின் நிறைவே" யாதலின் லக்ஷ ரூபா சம்பாதித்தும் அது 2-லக்ஷ ரூ.க்குக் குறைவா யிருப்ப தாகக் கருதித் துயருறுவாரேல் அத் சேர்க்கும் வரை அவரை வறிஞரே என்பேன். ஏனெனில், "அல்கா நல்குரவு அவா வெனப் படும்" அன்றோ? இத்தகை யோரின் காலக்ஷேப அட்டவணை வரு மாறு:—

காலையில் காபி. பிறகு 11 மணிவரை கட்சிக் காரருடன் கலந்து பேசல். பிறகு வெந்ததும் வேகாததுமாக அவசரத்தில் விழி பிதுங்க ஜீரண சக்திக்கு ஹானி உண்டாகத் தின்று கச்சேரி

சென்று, 5 அல்லது 6 மணி வரை மூளை வறளக் கட்சி பேசல். பின் 8½ மணி வரை காற்று வாங்கவோ களைப்பாறவோ கிளப்பிற்குச் செல்லல். பிறகு சாப்பிட்டு நாளைச் செய்யவேண்டிய காரியங்களுக்குச் சட்டாதாரம் தேடல்-நித்திரை செய்தல்-இத்தகையோர்க்குப் பிள்ளைகளின் படிப்பு விஷயத்தை சம்பந்தமாய் ஒரு நாளைக்கு அரை மணியேனும் எவ்வாறு கழிக்கக் கூடும்?,, என்று விசாரித்துக் கூறினர்

அவர் சொல்லியதெல்லாம் உண்மையென்றே கண்டேன். ஏனெனில், அப் பெற்றோரே ஈதெல்லாம் உண்மையென ஒப்புக்கொண்டனர். அப் பெற்றோரிற் சிலரை நோக்கி "நீர் சொல்லுவது சரியே. ஆயினும் உமக்கும் ஒரு யுக்தி சொல்லுகிறேன். அதை அநுஷ்டித்தால் அது உமது ஜீரண சக்தியையும் பையன் அபிவிருத்தியையும் அதிகரிக்கச் செய்யும்: உம்மோடல்லது பையனுக்கிரவில் உணவிட வேண்டாம் என்று பரிசாரகனுக்கு உத்திரவிடும். இருவரும் உண்ணும்போதே பையனை அவன் அன்றன்று செய்த காரியத்தைப் பற்றி விசாரணை செய்யும். அப்பொழுது அவனுடைய அபிவிர்த்தியைப் பாரும்!" என்றேன். அப்பிரகாரமே அவரும் செய்து இருவகையிலும் தாமெய்திய நலத்திற்காக நன்றி கூறி எனக்குக் கடிதம் வரைந்தார். ஆதலால் மனமுண்டானால் வழியுமுண்டு, பாருங்கள்.

போதனமுறை பயிற்றுஞ் சாலையைச் சார்ந்த உபாத்திம மாணவர்களே! உபாத்திமச் சங்கத்தினரே! பெற்றோர் உதவியின்றி நீவிர் பெரும்பயன் எய்தல் அரிது என்பதற்கு இன்னமும் ஓர் உதாரணம் கூறி நிறுத்துவேன். சென்னையில் வசித்துவந்த ஒரு பிரமுகர் தனது சிற்றப்பன் இல்லத்தில் கும்பகோணத்தில் வசித்து பிரவேச பரீக்ஷை முதல்தரத்தில் தேறின தனது மகனை பட்டணம் கொணர்ந்து, இராஜதானிக் கலாசாலையில் F. A. வகுப்பில் சேர்த்தார். இரண்டுவருஷ முடிந்த உடன் "பரீக்ஷை தேறினவர் ஜாப்தா" வில் பையனுடைய பெயரைக் காணாமல் பதைபதைத்து, 'பங்களா' சென்று, பையனை விளித்துப் பின்வருமாறு பிரலாபித்தனர்: "அடே? துரோகி! இன்றுவரை எனக்கு எவரும் இணையில்லை என்று இறுமாந்திருந்தேனே! என் சீர் குலைக்க எங்கு தலைப்பட்டாய்? உச்சி வெடிக்க, கடும்வெயிலில் கால்நடை நடந்து கலாசாலை சென்றபோது மெற்

றிக்குலேஷன் முதலாய்த் தேர்ந்த நீ, இங்கு வந்தவுடன் மோட்டார் ஏறுவதிலும் பந்து விளையாடுவதிலும், உல்லாசமாய் உனது காலத்தைக் கழித்ததனா லன்றோ நான் "காஸ்மாபாலிடன் கிளப்" சென்றவுடன் சகலரும் சந்தோஷமடைய, நான் மாத்திரம் துக்க மிக்கவனாய்த் தலைகுனிந்திருக்க வேண்டியதாயிற்று"? என்று முகம் வியர்க்கமொழிந்து, பையன் கன்னத்திலும் டளீரென அறைந்தார். வாய்மொழி முடியும் வரை மௌனமாயிருந்த அப்பையன் அறை யைப்பெற்றபின் ஆத்திரப் பட்டு, "ஐயா! என்னை வளர்த்தது வெயிலன்று, படிப்பைக் கெடுத்தது பந்து மன்று, நான் இக்கதியுற்ற தற்கு நீங்களே முக்கிய காரணர். தந்தையைத்தாழ்வாய்ப் பேசுவது தவறென்று அறிந்தேனாயினும், மனமின்றியே உண்மையை மொழி கின்றேன். தாங்கள் இப்போது பேசியதினின்றும், என் மீது, தங்களுக்கு அதிகக் கருத்தில்லை என்பதையும், காஸ்மாபாலிடன் கிளப்பார் என்ன சொல்லுவாரோ என்னும் ஏக்கமே உமக்கு மேலிட் டிருக்கிறது என்பதையும், நான் அனுபவித்த மோட்டார் முதலிய ஆடம்பரங்கள் ஒருவிதத்தில் தங்கள் பெருமையைப் பிரசித்தம் செய்ய உதவினவேயன்றி, உள்ளன்போடு உபகரித்தவை யில்லை என்பதையும், ஒருவாறு அறிகிறேன். இரண்டு வருஷ காலமாக நான் இங்கே இருப்பது கூடத் தெரியாதே. என் பந்தாட்டத்தின் பெருமையைப் பத்திரிகைளில் கண்டுமகிழ்ந்த, நீர் என் படிப்பைப் பற்றி என்னை எப்போதாவது விசாரித்தீரா? ஆங்கிலம் சிறிதும் உணராத என் சிற்றப்பன் என் படிப்புவிஷயமாகக் கொண்ட கவலை யில் தாங்கள் ஐம்பதில் ஒரு பங்கேனும் வாரம் ஒருமுறையாவது நீர் கொண்டிருந்தீரேல் எனக்கு அடியும், தங்களுக்கு அவமானமும் இல்லாதிருக்குமே" என்று அழுதான்.

நல்ல வேளையாய் உங்கட் கிதுபோன்ற கஷ்டம் ஏதும் இரா தென்றே எண்ணுகிறேன். ஏனெனில் உங்களிற் பெரும்பான்மை யோர் இனிச் செல்லுமிடம் சதா பலவகைக் காரியங்களிலும் பட் டுழலும் பட்டணமன்று. ஏதும் செய்ய அவகாசமுள்ள கிராமங் களே. மாலை வேளைகளில் தம் வேலையினின்றும் கிராமவாசிகள் திரும் புங்காலை, அவர்களிடம் சம்பாஷிக்கும் போதே, தமிழ் மொழி யால் உங்கட் குள்ள பாண்டித்யம் போதுமானதா யிருப்பின்,

பூகபௌதிக சாஸ்திரங்களின் சிறு நுட்பங்கள், உலகாற்புதங்கள், நாநா தேசத்திய நாகரீக வளர்ச்சி முதலியன பிரஸ்தாபித் துணரத் தக்க சமயம் வாய்க்கும். இவ்விதம் செய்வீரேல் பொதுஜனப் பாமராபிவிருத்தி முளைத்து, சிறிதுசிறிதாக நாளடைவில் பெரிதாகப் பரவும். இப்பெரும்பேறு அடைவது வேறு எவ்வகைத் தொழில் முயற்சியானுமில்லை.

இனி, பரிதபிக்கும் வண்ணம் உங்களுக்குக் கிடைக்கும் சொற்பச் சம்பளத்தைக் குறித்து உங்களுக்கு நான் இரங்கப் போவதில்லை. ஜட்கா வண்டிக்காரன், பரிசாரகன், டபேதார் இவர்கள் பெறும் சம்பளத்தினும் குறைந்த சம்பளம் நீங்கள் பெறுவதும், அது உங்கள் ஜீவனார்த்தத்துக்கு ஒரு சிறிதும் போதாதென்பதும் உண்மையே. ஆயினும் பொருள் வருவாய் ஒன்றையே கருதும் அதமாதமர்களான அற்பக் கூலிக்கார உபாத்திம வகுப்பைச் சேர்ந்தவர்க ளல்லரே நீங்கள்? இத்தொழிலை நீங்களே வலிய விரும்பி ஏற்றதால் இதை மனத்திருப்தியோடு பலாபேக்ஷை கருதாமல் உழைத்துத் தீரவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இக்காரணம் பற்றிக் கலாசாலை அதிகாரிகளும் வித்யா இலாகாத் தலைவர்களும் உங்களைச் சிறுமைப் படுத்தாதிருப்பார்களாக. உங்கள் தகுதியை அவர்கள் கவனியாவிடினும் பாமரப்படிப்பு விருத்தியாகும் பொழுது உங்கள் க்ஷேமலாபங்களும் தாமாகவே விருத்தியாகிவிடும். உங்களிடமிருந்து மிக்க பயன் பெற்ற பாமர ஜனங்கள் பதிலுபகாரம் செய்யாத அவ்வளவு நன்றி கெட்ட மாந்தர்களாக இரார் என்பதே எனது மெய் யெண்ணம்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்

# மாலினீ மாதவம்.

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 18-வது அத்தியாயம்.

## சோதவின

இரவு 12-மணி நேரமிருக்கலாம். பக்கத்திருப்போரைக் கூடப் பார்க்கமுடியாவண்ணம், எங்கும் ஏக இருளால் மூடப்பட்டிருந்தது. கள்ளன்கோட்டைக்குள் யாதொருவிதமான அரவமுமின்றி நிச்சப்தமாயிருந்தது. திம்மனும் பொம்மனும், அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களும், உபக்ரகங்களும், அன்று மாலை குடித்த அரக்குச் சாராய வெறியால், தம்நினைவற்று, அயர்ந்து நித்திரை செய்கின்றார்கள். ஆகாசத்தில் பரவிப் பிரகாசிக்கும் எண்ணிறந்த தாராகணங்களைத் தவிர, பூமியில் நடப்பனவற்றைப் பார்க்க வேறொரு ஸாக்ஷியங்களுமில்லை. கோட்டை வாசலானது சார்த்தித் தாளிடப்பட்டு தக்க பாராக்காரர்களால் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. கோட்டைக்குவெளியே ஆங்காங்கு இரண்டோரிடங்களில் மாத்திரம், தீவளர்த்து அதன்பக்கத்தில் சில பளியர்கள் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்.

மலை ப்ரதேசங்களில் சிற்சில திசைகளிலிருந்து சில மிருகங்களின், ரீங்காரசத்தமும், நாய்களின், ஒற்றைக்குரலும், இராக்கோழிகளின் கொக்கரிப்பும் எதிரொலித்துக்கொண் டிருந்தன.

இந்நிலைமையில், கோட்டைக்குள் ஓர் சாவடியில் இருட்டில் படுத்திருந்த நமது பகல் வேஷக்காரர், மெதுவாய் எழுந்து, தனது சட்டைப் பையில் கைபோட்டு, ஒரு தீப்பெட்டி யெடுத்து, அதனின்றும், ஓர் குச்சியெடுத்து உறைக்க, அதனின்றும் உதயமான ஜ்வாலையால், பக்கத்தில் தன்னைத்தவிர வேறு மனிதர் யாவருமில்லையென்று நிச்சயப்படுத்திக்கொண்டு, தன்கைவசமிருந்த ஓர் மெழுகு திரியில், தீபத்தை ஏற்றிக்கொண்டு அவ்விடம் விட்டு மெதுவாய் அடிமேல் அடிவைத்து அங்குமிங்கும் கவனித்துக்கொண்டுசென்றார்.

சிறிது நேரத்துக்குள் நமது வேஷதாரி, ஓர் பழைய கட்டிடத்துக்குள் நுழைந்தார். அக்கட்டிடமானது வெகுகாலமாய் மனிதர் வாசமற்றுப் பாழடைந்தது. அநேக விடங்களில், இடிந்தும் பூச்சிக்கூடுகளும், கறையான் புற்றுக்களும் வைக்கப்பெற்றதாயிருந்தது.

மினுக்கு மினுக்கென்று எரியும் தன் சிறியவிளக்குடன் அப் பாழ் வீட்டுக்குள் நுழைந்ததும் அவனுடைய ஸஞ்சாரம், வெளி யே தெரியாதவாறு முற்றிலும் மறைபட்டுவிட்டது. கடைசியாய், நமது வேஷதாரி, ஓர் பழைய கதவண்டை வந்து சேர்ந்து, தனது கொத்துச்சாவிகளில் ஒன்றை யெடுத்து அதைப் பூட்டில் மாட்டிச் சுழற்ற அக்கதவு திடீரென்று இடம் வழிவிட்டது.

அவ்வழியாய்ச் சிறிதுதூரம் சென்றவுடன், வேஷதாரி, சில படி வரிசைகளின் வழியாய், ஓர் பிலத்துவாரத்துள் சிறிதுதூரம் இறங்கி னார்; அவ்வழி கடைசியாய் ஓர் அறைக்குள் முன் கொண்டுபோய்ச் சேர்த்தது. அவ்வறைக்கு முன்புள்ள பலகணிக் கதவு வழியாய் நமது வேஷதாரி, தன் விளக்கொளியால், அவ்வறையினுள் நோக்கவே—

ஆ! என்ன கண்டார்! என்ன ஆச்சர்யம்! உடனே திடுக்கிட்டுப் பின்னடைந்து, பின்சுவரில் அப்படியே சாய்ந்தார். தன் இடது கையில் பிடித்ததிரி அவ்வாறே எரிந்து கொண்டிருக்கின்றது. வலதுகையில் கொத்துச் சாவிகளிருந்தன. இவ்வளவு திடுக் கிடலுக்குக் காரணம் யாது?

மனிதவாழ்வில் முன்நேர்ந்த ஸம்பவங்களைத் தற்கால ஸந்தர்ப் பங் (present circumstances) களுடன், கார்ய காரணவிதியின் பிரகாரம் ஒத்துப்பார்த்து இனி நேரிடக்கூடியவைகளை யொருவாறு உத்தேசமாய் ஊஹிப்பதே த்ரிகாலஞானிகளின் தன்மையெனப் படும். இவ்வற்புத புத்தித்திறமை விசேஷமாய், மந்திரிகள், ராஜ தந்த்ரி (Peiticins and statesmen) கள் முதலான ப்ரதான நிர்வாஹாதிகாரிகளுக்கு இன்றியமையாத தாயினும், சாதாரண மனி தர்களுக்கும், தங்கள் இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாய்க் கழிப் பதற்கு அவசியமானது. புத்திமானே பலவான் அல்லவா? இவ் வாறு முக்காலத்தையும் முற்றுணர்ந்து, இனி நேரிடுபவைகளை யறி ந்து, அவைகளை யெதிர்பார்த்திருப்பதே எதிர்பார்த்த (expected) ஸம்பவங்கள் எனப்படும், எதிர்பாராது தற்செயலாய், நேரிடுபவைக ளெல்லாம் "எதிர்பாரா (un-expected) ஸம்பவ" ங்களெனப்படும். எதிர்பாராது நேரிடும் ஸம்பவங்களினின்றும், மனதுக்கு ஓர் வித விகாரம் ஏற்படுகின்றது. இதுதான். "ஆச்சர்யம்" (Surprise) என் ற மனோவிகாரம் (Emotion.)

நமது வேஷதாரி, ஆச்சர்யத்தால் திடுக்கிட்டுப் பின்னடைந்ததும், சற்று, தந்நிலைவற்றுத் தயங்கிவிட்டுப் பிறகு தைர்யமடைந்து தன் கையில் பிடித்திருந்த மெழுகு திரி வெளிச்சத்தை அவ்வறையின் பலகணிவழியாய், உட்செலுத்திப்பார்க்க, ஆங்கோர், பெண், சுமார் 40வயதுள்ளவள், கந்தை யாடையுடனும், விரிந்தகேசத்துடனும், இளைத்த சரீரத்துடனும், காலக் கொடுமையால் இக்கோலமடைந்தவளாய், அவ்விருட்டறையினின்றும் எட்டிப்பார்த்து அடே! பாவி! இன்னும் உனக்கு இரக்கம் வரவில்லையா? அடே! பெண்பாவம் பொல்லாதது. நான்ஒன்றும் சொல்லவில்லை. எங்கேயாவது ஓடிப்போகிறேன் கண்ணுக்கெட்டாததேசத்துக்கு! என்று தீனமான குரலுடன் பலவாறு ப்ரலாபித்து அழுதாள்.

வேஷதாரி, பற்பல மனோவிகாரங்களின் சேஷ்டை (Conflicts of emotions.) களால், ஒன்றும் சொல்லத் தோன்றாமல் சற்று நின்றுவிட்டு,மறுபடி தைர்யமாய்,பெண்ணே! நீயார்? தைர்யமாய்ச் சொல். நான் கள்ளன்கோட்டையான் வகையைச் சேர்ந்தவனில்லை. நான் இங்கொருவனைச் சிறையினின்றும் மீட்கவந்திருக்கின்றேன். நீ யார்? உன்னையும் விடுவிக்கச் சித்தமாயிருக்கின்றேன். "என்ன நேர்ந்தாலும் சரி" என்ன,

அப்பெண் ஐயனே! தாம் யாரோ ஓர் மஹான் போலக்காண்கின்றீர்கள் ஆண்டவனே! இவ்வுருவாய், என்னை ஆதரிக்கவந்தனரோ! ஐயனே, நீர்தான் தெய்வம், நீர்-நீர்-நீர்-என்று சொல்லிக்கொண்டே சோகபாரத்தால்,மதிமயங்கி அப்படியே தரையில் கண்ணும் கண்ணீருமாய்ச் சாய்ந்தாள்.

தாமதிப்பது பிசகென்று உணர்ந்து நமது வேஷதாரி, திடீரென்று, தனது சாவிகளை, அப்பூட்டுகளில் ஒவ்வொன்றாய் மாட்டிச் சுழற்ற ஒன்றும் சேரவில்லை. பிறகு அதிகமான ஆவேசத்துடன், தன் உடைப் பையிலிருந்து, சிறு அறத்தையெடுத்து அப்பூட்டின் கொண்டியை அறுக்கவே சிறிது நேரத்தில், அக்கதவு திடீரென்று திறந்தது. வேஷதாரி உள்ளேசென்று, அப்பெண்ணின் தலையைத்தன் மடிமீது சாய்த்துக்கொண்டு, ஆங்கோர் செம்பில் வைத்திருந்த நீரை அவள் முகத்தில் தெளித்துத் தன் உடைப்பையிலிருந்து ஓர் சிமிழியைத்திறந்து ஓர் உப்பையெடுத்து, விரலில் கசக்கி அவள் மூக்குக்கு நேராகப்பிடிக்க, அவள் மூர்ச்சை தெளிந்து எழுந்து, பரபரப்புடன் நமது வேஷதாரியின் முகத்தையே நோக்கினாள். வேஷதாரியும் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிந்துகொண்டு அம்மங்கையை யதிகமனக் கவலையுடன் உற்று நோக்கினார்.

(இன்னும் வரும்)

R.S நாராயணஸ்வாமி ஐயர், B. A. B. L.

# * வானம்பாடிக்கும்மி.

வாழி! உல் லாசமாய் வாழ்அச ரீரியே!
வானகத் தோ, அங்க ருகிருந்தோ,
தாழ்வில் இ தயத்துத் தானென ழும்இசை
தன்னை உ குக்கும் நீ புள்அல வே. (1)

நாடிமென் மேல்புவி நின்றுபாய் வைதீபோல்
நன்னீல வான்கடல் மீதெழுவை.
பாடிக்கொண் டேஉய ரப்பறப் பையென்றும்
பறந்து கொண்டேநீ பாடிடு வை. (2)

சுந்தர மாய் ஒளிர் மேகம்ம றைக்கும் ஆழ்
சூரியன் பொன்னொளி வீசுகையில்
பந்தம்அ றவெளிப் பட்டிடும் ஆநந்த
படிவம் எ னமிதந் தோடிடு வை. (3)

வட்டம்இ டும் இடம் சுற்றிய மங்கு செம்
மாலைப்பொ ழுதுரு கிமறையும்.
பட்டப்ப கல்மறை விண் உறை மீன் எனப்
பார்வைக்குத் தோற்றிலை நீ எனினும், (4)

தெள்ளிய வெள்உத யத்தில் தன் மிக்கொளி
தேய்ந்தும் தான் அங்குள்ள தென யாம்
உள்ளத்து ணரும்அவ் வெள்ளியின் கூர்கதிர்
ஒத்தநின் கூர்களி கேட்டிடு வேன். (5)

மாசில்இ ரவில் ஓர் மேகத்தி டைநின்று
மாமதி தண் கதிர் வானம் எலாம்
வீசநி றைவது போலவே மூழ்கிடும்
விண்ணகம் மண்ணகம் நின்இசையால். (6)

இன்னது நீஎன யாம்அறி யேம்உனக்
கேதுச மானம்பெ ரும்பாலுன்?

---

* (இது P. B. Shelly என்ற ஆங்கிலப்புலவர் பாடிய "Ode To A Sky-lark" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.)

வன்னமு கத்தொளிர் இன்னிசை மாரிபோல்
வானவில் மேகமும் பெய்திலதே. (7)

கொள்ளாத நம்பிக்கை ஏக்கம் இவை புவி
கொள்ளுமட் டும்பிறர் தூண்டாதே
எள்ளாத தெள்ளிசை பாடிடும் தன்பெரும்
எண்ணத்தில் ஆழ்கவி வாணன்கொலோ? (8)

தன்னது றையுள்நி ரம்பநடுநிசி
தன்னந்த னியாத்தன் வேட்கையென
மன்னிய கீதத்தால் காதல்த ணித்திடும்
மாடத்து யர்குலக் கன்னிகையோ? (9)

தனை மறைத் திடுகின்ற புல்லினும் பூவினும்
தானாக வேமின்ஒ ளிபரப்பும்
பனிநிரம் பும்பள்ளத் தாக்கில்உ றைகின்ற
பைம்பொன் நி றமின்மி னிதானோ? (10)

மூடிடும் பச்சிலைக் குள்ளிருந் துவெய்ய
மூசிளங் காற்றால்இ தழ்விரித்து
நாடிடும் சோரஅத் தென்றலும் சோர்ந்திட
நறுமணம் வீசிடும் ரோஜாவோ? (11)

மின்னிடும் புல்லதன் மேல்வசந் தத்துளி
வீழ்ஒலி யினுமழைப் பூவினுமே
இன்பசுத் தநவ மாய்உள யாவினும்
இயைந்து மேல்எழும் நின்இசையே. (12)

அசரீரியே! புள்ளே! நின்இன்பச் சிந்தனை
ஆனதென்? கள்உண்போன் கள்துதியில்
திசைதொறும் காதலன் காதற்பாட் டில்உன்றன்
திவ்யக்க ளியெழக் கேட்டிலனே (13)

கல்யாண வாழ்த்தைஜ யஇசை யைஉன்றன்
கானத்தோ டொப்பிட்டுக் கூறல் எலாம்
இல்லாப்பெ ருமையே ஆகும்: இவைகளில்
ஏதோகு றைஉள தென்றுணர் வேம். (14)

எப்பொருள் மூலம்நின் இன்பக்க ளிப்பினுக்
கெந்நிலம்? எக்கடல்? எம்மலை? விண்?
எப்புலம் நினைஇனத் தெத்தகை நேயம்? மற்
றெவ் வகைத் துன்பறி யாததுவே? (15)

சுத்தநின் கூர்இன்னி சைஎழுப் பஎன்றும்
சோர்வுறும்; சோகமே கிட்டாது
சித்தத்தில் அன்பளை! நின்உளம் நைதரத்
தெவிட்டும் நேயம் அறிந்தில தே. (16)

மாய் எம்மி னும்தூங்கி யோவிழித் தோமிக
வாய்ந்தனை சாவுண்மை; அன்றாயின்
நீஎவ்வி தம்இன்னி சைஅரு விப்புனல்
நின்மல மாகநி ரப்பிடு வை? (17)

இறப்பெதிர் வெண்ணிக்க லங்கிஇல் லாததற்
கேங்குவம்; நம்முள் எழும் மகிழ்வும்
பெறத்தகும் துன்பக்க லப்பு;ந மக்கின்பப்
பேறிசை சோகர ஸப்பாட் டே. (18)

அச்சம், அகந்தை, அசூயைஅ கற்றினும்
அன்றியும் கண்ணீர்உ குத்திட யாம்
இச்சகம் தோன்றிலம் ஆயினும் நின் மகிழ்
வெப்படி எட்டுவம் என்றறி யேன். (19)

இன்பம்வி ளைத்திடும் இன்னிசை யாவினும்
எட்டிற்பு தைபொருள் யாவினும் நின்
றன்பெரும் சாமர்த்தி பஇசை மேலெனத்
தாங்கொள்வ பாவலர் மண்இகழ் வோய்! (20)

உன் உளம் ஒரும்உ வகையி னிற்பாதி
ஓதுவை யேல்என்இ தழ்நின் றெழும்
இன்னிசைப் போதைசெ வியுறும் இவ்வுல
கின்னேயான் நின்இசை கேட்டிடல் போல். (21)

ம. கோபாலகிருஷ்ணையர்.

தனர். பெண்பாலாரும் சிலர் வந்து பிரத்தியேகமான இடத்தில் இருந்தனர்.

சபை கூடியவுடன் சபையார் விருப்பப்படி திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் சேது சம்ஸ்தானத்தில் மெடல் பரிசு பெற்றவரும் இயற்றமிழ் இசைத்தமிழ் வல்லுநரும் ஆகிய ஸ்ரீ, எம். எஸ். சந்தானையங்காரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

முதலில் கடவுள் வாழ்த்து தேவாராதி அருட்பாக்கள் இனிமையாக ஓதப்பெற்றன. வலயமாநகரம் கலாசாலைத் தமிழ்ப் போதகராகிய நெடுவை வித்துவான் ஸ்ரீ, திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் நம்பிக்கை என்னும் விஷயத்தைப் பற்றி நன்றாக உபந்யசித்தனர். உலக வாழ்க்கையில் மிகப் பெரியவர்கள் முதல் மிகச் சிறியவர்கள் வரை யர்வரும் எக்காரியங்களைச் செய்யினும் நம்பிக்கை வைத்துச் செய்தாலன்றிப் பயன்படுவ தில்லையெனவும், பரலோகவாழ்க்கையைப் பற்றி நாம் முயல்வதற்கு நம்பிக்கையே முக்கிய சாதனமா மென்பதும், உலகம் முழுதும் நம்பிக்கை யென்ற கயிற்றாலே கட்டப்பட்டிருக்கிற தென்பதும், நம்பிக்கை யில்லாதவர்கள் யாவராயினும் இகத்திலும் பரத்திலும் இன்பமடைய முடியா தென்பதும், ஆதலால் கடவுளிடத்திலும், கடவுளுக்குப் பிரதிநிதிகளாக விளங்கும் ஆசாரியர்களிடத்திலும், சமயசாஸ்திரங்களிடத்தும் நம்பிக்கை வைத்தே ஒழுக வேண்டு மென்பதும் இனிது விளக்கிக் காட்டினார்கள். இடையிடையே இவர்கள் பாடிய இசைப்பாட்டுகள் யாவர் மனத்தையும் உருகச் செய்தன.

பின்னர், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ, மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அறம் என்னும் விஷயத்தைப்பற்றிச் சபையோர் யாவரும் பரவசப்படும்படி அமிர்த வர்ஷம் பொழிந்தாற் போல் பிரசங்கித்தனர். மானிட சென்ம மெடுத்தவர்கள் அடைய வேண்டிய புருஷார்த்தங்கள் நான்கனுள் ஏனைய மூன்றையும் தரத்தக்கதாகி அவற்றுட் டலைபெற்று நிற்பது அறமே யெனவும், மனத்துக்கண் மாசின்மையுடன் இயன்றளவு பிறர்க்குக் கொடுப்பதே தலையாயதுமெனவும், பூர்வத்தில் அறம் செய்தவர்களே இப்

பொழுது சகல செல்வமும் பெற்று வாழ்கின்றார்களெனவும், இந்த ஜன்மத்திலும் அறம் செய்தால் தான் இனி வரும் பிறப்புக்களில் நன்னிலையடையலா மெனவும், பொறாமையாலும் ஆசையாலும் கோபத்துடனும், கடுஞ்சொற்களுடனும் செய்யப்படுவது அறச் செயலாக இருப்பினும் அது அறத்தின் பயனைத் தராதெனவும், காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்பத்தக்கவாறு அறஞ்செய்யவேண்டு மெனவும், ஒருவர் ஒரு அறம் செய்தால் ஏனையரும் அதையே செய்ய முயலாமல் புதிய புதிய அறச் செயல்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், தற்காலம் நகரத்தார்கள் வசிக்கு மிடங்களில் கலாசாலைகள் பல ஸ்தாபிப்பது பெரும் புண்ணிய மாகுமெனவும், செல்வத்தாலாகும் பயன் இதை விட வேறில்லை யென்பதும், அலை யடங்கிய பின்பு கடலாட நினைப்பதுபோற் கருதாமல் இப் பொழுதே தங்கள் தங்கள் வேலைகளுடன் அறஞ் செய்தலில் முற் பட்டு இயன்ற வரையும் செய்ய வேண்டு மெனவும், இன்னும் பலபட விரித்து வடமொழி தென்மொழிக் கவிகளை உதாரணங் காட்டி இடையிடையே சிறிய கதைகளையும் கூறி மிகவும் நன்றாக உபந்யசித்தனர். இதன் மத்தியில் கம்பராமாயணக் கவிகள் இரண்டு சொல்லி அவற்றின் நுண்பொருள்களை விளக்கினார்கள். இச்சமையம் சபையார் யாவரும் தம்மை மறந்து சந்தோஷமயமா யிருந்தனர்.

பின்னர், மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் பொருள் (கல்வி) என்பதைப் பற்றிப் பிரசங்கித்தனர். பொருள், கல்வி செல்வமென இருதிறப்படு மென்பதும், அவற்றுள் கல்விப்பொருளைப் பற்றியே இங்கு சொல்லப்படு மென்பதும் செல்வத்தினும் சிறந்தது கல்வியே யென்பதும், கல்வியாற் பெறப்படும் நன்மைகள் இவையென்பதும், கல்லாமையால் வரும் தீமைகளிவை யென்பதும், செல்வர்கட்குக் கல்வி யின்றியமையாத தென்பதும், மற்றும் பலவாறாகவும் உபந்யசித்தார்கள்.

பின்னர் தேவிகோட்டையைச் சார்ந்த கல்லுப்பட்டியில் வடமொழி யுபாத்தியாயராக இருக்கும் ஸ்ரீ த. நாராயண சாஸ்திரியாரவர்கள் கல்வியைப் பற்றியே அநேக வடமொழிச் சுலோகங்களைக் கூறிப் பொருள் விரித்தார்கள். கல்வி கற்கவேண்டிய அவசியத்

தைப் பற்றியும், கற்கும் முறைமையைப் பற்றியும், கற்கும் காலத்தைப் பற்றியும், கற்கத்தக்க நூல்களைப் பற்றியும் சபையார் மகிழும்படி செவ்வையாகப் பேசினார்கள்.

பின்னர், தேவிகோட்டையில் வசிக்கும் வித்துவான் ஸ்ரீ சொ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் அறிவு என்பதைப் பற்றிப் பிரசங்கித்தனர். அறிவு கல்வியின் அளவாக வருவதென்பதும், அறிவுடையவரே எல்லாம் உடையராவர் என்பதும், அறிவு இல்லார் எவ்வகைச் செல்வங்களை யடைந்திருப்பினும் பயனில்லை யென்பதும், தத்தம் அறிவைப் பார்க்கினும் தங்கள் தங்கள் மக்களின் அறிவைக் காண்டொறும் பெரு மகிழ்ச்சி விளையுமாதலின் மக்களைக் கற்பித்து அறிவுடையாராக்க வேண்டுவது முக்கிய கடமையே யென்பதும், அறிவுடையவன் அரசர்களால் மதிக்கப்படுவானென்பதும், அவன் சொற்படியே உலக மெல்லாம் நடைபெறு மென்பதும் மற்றும் பலவும் விரித்துத் தெளிவாக நன் மொழிகளால் பேசினார்கள்.

பின்னர், அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொருவர் உபந்யாசங்களின் சாரத்தையும் எடுத்தெடுத்து மறுபடி சபையார்க்கு விளக்கிப் பேசிய வகையில் தமது ஆற்றலைக்காட்டியதுடன் அவர்களின் இனிய இசையால் எல்லாரும் மனமுருகும்படி செய்தார்கள்.

அக்கிராசனாதிபதியவர்கட்கு மாலைசூட்டிச் சந்தன தாம்பூலங்கள் வழங்கி வித்துவான்கட்கும் நன்றிகூறி சபையார்க்கும் நன்றிகூறி வாழ்த்துப் பாட்டுப் பாடப்பெற்றது. இரவு 10 மணிக்கு நிறைவேறியது.

வித்துவான்கட்கும் ஏனையர்க்கும் அந்நகரத்தார்கள் மிகவும் அருமை பாராட்டி நல்விருந்தூட்டி உபசரித்தார்கள். இங்ஙனம் நிறைவேறிய பிரசங்கங்களின் பயனாக இங்கு ஒரு செந்தமிழ்க்கலாசாலை ஸ்தாபிக்க நகரத்தார்கள் முயல்கின்றனர். இவ்வூர் நகரத்தார்கள் எல்லாரும் ஒற்றுமையுடன் மனத்திருப்தியாக முயல்கின்றனராதலின் கூடிய விரைவில் கலாசாலை ஏற்படுத்தப் பெறும் என்றே நினைக்கின்றோம். திருவாலவாயான் திருவருள் புரிக.

தேவைவாசி.

# சமாசாரம்.

ஒட்டுக்கேட்கும் யந்திரம்:—இருவர் இரகசியமாகப் பேசும் விஷயத்தை தூரத்தில் உள்ளவர் கேட்கும்படியாக டெலிபோனை (Telephone) இணைக்கிச் சில கருவிகளைச் சேர்த்து, ஒட்டுகேட்கும் யந்திரம் ஒன்றைப்புதிதாக ஒரு ஆங்கிலேயர் கண்டுபிடித்திருக்கிறார். அந்த யந்திரத்தை, ஜயில் வியாபாரச் சாலைகள் முதலிய இடங்களில் ஸ்தாபித்துள்ளார்' அதனால், இரகசியங்கள் வெளிவந்துவிடுகின்றன.

1 மணிக்கு 150 மைல் ஓடக்கூடிய ரயில் வண்டி:—ரயில் வண்டி 1 மணிக்கு 150 மைல் போகக் கூடியதாய் ஒருவர் சில உபாயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த வண்டி ஒரே ஒரு ரயிலில் போகிறதாம். அபாயத்திற்கு உள்ளாகாதபடி வண்டிக்கு மேல் ஒரு ரயில் கம்பி போகிறதாம். அவவிரண்டுக்கும் மத்தியில் குழல் போல் போகிறதாம். ஆட்ட மில்லையாம். அதிக வேகமாய்ப் போவதால் பிரயாணிகளுக்குச் சிரமமில்லையாம். இவ்வண்டியை ஓட்டுவதில் இரண்டு ரயில் கம்பிகளில் போகும் வண்டியை ஓட்டுவதை விடச் செலவு சுருக்கமாம். இதை விரிவான அநுஷ்டானத்தில் கொண்டு வருவதற்கு ரயில்வண்டி Engineer நிபுணர்கள் பரீக்ஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய வண்டித் தொடர் அநுஷ்டானத்திற்கு வரும் பக்ஷத்தில், உலகத்திற் காரியங்கள் இன்னும் தீவிரமாய் நடக்கும்.

சென்ற ஜனக்கணக்கின்படி, நம் தேசத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் $29\frac{1}{2}$ கோடி ஜனங்கள்; அவர்களுள், ஸ்திரீகள் $15\frac{1}{4}$ கோடி; புருஷர்கள் $14\frac{1}{4}$ கோடி பெயர்கள். அவர்களுள் முகம்மதியர் 2 கோடியே 30 லக்ஷம் பெயர்கள்; ஹிந்துக்கள் 20 கோடியே 5 லக்ஷம் பெயர்கள். இப்படி இருந்தால் நம் தேசம் முன்னுக்கு வருவது எப்படி? கல்வி அறிவு விருத்தியானால் ஒழிய வேறுவிதமான விமோசன மில்லை. ஒவ்வொரு தநவானும கீழ்தரப் படிப்புக்கேற்ற ஒரு பள்ளிக்கூடத்தையாவது ஏற்படுத்தல் முடியாதா?

புகையிலைக் காகிதம்:—புகைச்சுருட்டு செய்வதில், புகையிலையின் மத்தியில் உள்ள நரம்புகள் பிரயோஜநப் படாமல் ஒதுக்கப் படுகின்றன. இப்போது, அவ்வொதுக்கிய நரம்புகளை காரமான ஸோடா (Caustic) ஜலத்தில் ஊற வைத்து, மெல்லியவைகளாக ஆக்கி, பின்பு அரைத்து கூழ் போலச் செய்து, காகிதங்களை உண்டு பண்ணும் இயந்திரங்கள் மூலமாய், காகிதங்களாகச் செய்கின்றார்கள். பூராக்காகிதமும் புகையிலைச் சத்தாக இருக்கின்றமையால், புகையிலைச் சுருட்டாக இக்காகிதங்களைச் சுருட்டுகின்றார்கள். புகையிலை ஸ்தானத்தில் இக்காகிதங்கள் உபயோகமாகின்றன.

பரிதாபி௵ மார்கழி௴ ௨௨ சோமவாரம் இரவு (8)மணி தொடங்கி (10) மணிவரை சிங்கப்பூர் நகரத் தெண்டாயுதபாணி கோவிலில் யாழ்ப்பாணம் இந்துகாலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமத். "ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள்" ஆலய வழிபாடு என்ற விஷயத்தை வந்திருந்த நகரத்தாரனைவரும் கேட்டுப் பரவசமாயிருந்து ஆநந்திக்குமாறு அநேக சாஸ்திர மேற்கோள்களைக் காட்டிப் பிரசங்கஞ் செய்தார்கள். பிரசங்க முடிவில் இவ்வூர் ஆர்யசங்க காரியதரிசி பிரும்மஸ்ரீ சி. எஸ். வெங்கிட்டராமையரவர்கள் எழுந்து அதனை வியந்து ஆமோதித்தார்கள்.

ஈக்களின் அபிவிருத்தி:—ஒரு ஈயின் ஜீவகாலம் 5 வாரம். இதற்குள் எத்தனையோ பேரன்கள் பேத்திகள், கொள்ளுப்பேரன்கள் கொள்ளுப்பேத்திகள், அவைகளுக்கு அப்பாலும் 3 அல்லது 4 தலைமுறைகளும் உண்டாகின்றன. ஒரு சமயத்தில் தாய் ஈ 100 முதல் 500 வரை முட்டைகளை இடுகின்றன. அவைகளைச் சாணிக் குவியலில் அல்லது அழுகிய குப்பைக் குவியலில் வைக்கின்றன. ஒரு வெயில் காலம் முடிகிறதற்குள்ளாக 20 லக்ஷம் முதல் 30லக்ஷம் வரை சந்ததிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஈயின் சரீரத்தில்,

வியாதிகளை உண்டுபண்ணும் நுண்ணிய ஜீவராசிகள் (Bacteria) 60 லக்ஷம்முதல் 70 லக்ஷம்வரை குடிகொள்ளுகின்றன. ஈக்கள் பறந்து உணவிலும், பாத்திரத்திலும் ஒரு விநாடி தங்கினால், எத்தனையோ 1000 க்கணக்கான வியாதி உண்டுபண்ணும் ஜீவராசிகளைப் பரப்பும். ஆதலால், மனிதனின் சத்துரு ஈக்கள்; அவைகளே வியாதிகளைப் பரவச்செய்கின்றன. அவைகள் மொய்க்கும்படி, அழுகியசாமான்கள் நீர்தங்கும் பள்ளங்கள் ஏற்படாமல் தவிர்க்கவேண்டும். எல்லா உணவுகளையும், பாகங்களையும் எப்போதும் மூடிவைக்கவேண்டும். பெரிய கொடிய நோய்கள் ஈக்களால் பரவச்செய்விக்கப்பெறவே எத்தனையோ மனிதர்கள் மாண்டுபோயினர். நாம் வசிக்கும் இடத்தை ஈக்கள் நாடாமல், சுத்தமாகவைத்துக் கொள்ளவேண்டும்.

பௌண்டன் பேன்:–பௌண்டன்பேன் என்னும் மையுள்ள பேனாவை முதல்முதல் கண்டுபிடித்தவர் 30 லட்சம்ரூபா சம்பாதித்தாராம். போனோகிராப் என்னும் பேசும் யந்திரத்தைக் கண்டுபிடித்த "எடிஸன்" மகாபுருஷர் அநேககோடி திரவியத்தைச்சேகரித்திருக்கிறார். இப்பொழுதுகூடச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்.

ஓர் விநோத கடியாரம்:—ஐரோப்பாவிலுள்ள கெடியாரக் கம்பெனிக்காரர் ஒருமுகத்திற்குள் கடுகளவு கனமுள்ள ஓர் நவீன கடியாரம் செய்திருப்பதாகவும் அது செய்து முடிக்க 15 நாள் பிடித்ததாகவும் ஒருபத்திரிகை கூறுகின்றது. அதற்கு அவர்கள் கூறும் விலை 1200 பவுன்.

லண்டன் பட்டணத்துக் காட்சிச்சாலையிலுள்ள புஸ்தகப் பந்தல்களின் நீளம் 32 மைல். கிரந்தங்களின் தொகை 11 லட்சம்.

பத்திராதிபர்.